செ.வெ.எண். 03/ஜூலை **செய்தி வெளியீடு** நாள்: 05.07.2016

**<u>மாவட்ட ஓய்வூதியர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.</u>**



மாவட்ட ஓய்வூதியர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (05.07.2016) மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர் அவர்கள் தலைமையில் ஓய்வூதிய இயக்கக கணக்கு அலுவலர் திரு. கி. மதிவாணன் மற்றும் கண்காணிப்பாளர் திரு. ரிச்சர்டு பாட்ரிக் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஓய்வூதியதாரர்கள் 9 நபர்களுக்கு ரூ. 3 இலட்சத்து 62 ஆயிரத்து 505-க்கான குடும்ப நல நிதி மற்றும் மருத்துவ நல நிதிக்கான காசோலையை மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர் அவர்கள் வழங்கினார். மேலும் ஓய்வூதியதாரர்களிடம் குறைகளை கேட்டறிந்து மனுக்களைப் பெற்று மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கணக்கு அலுவலர்கள் திரு. சுப்ரமணியன், திரு. மூக்கையா, திரு. மூர்த்தி, கருவூல அலுவலர் திருமதி. சுகந்தி, கூடுதல் கருவூல அலுவலர் திரு. நாகராஜன், வருவாய் உதவியாளர் திரு. சுகுமாரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.